**கவனிக்க.-** *14.09.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III, பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2090 - 2018 සැප්තැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2018.09.21

*2090 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1460 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | 1475 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகம் (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) கடன் இணக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2018, செத்தெம்பர் 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1459 - B81452 - 5,403 (2018/ 09)

# பதவிகள் - வெற்றிடம்

## முதன்மை தரத்தின் தொழில் நுட்ப, பகுதி தொழில் நுட்பம் அற்ற பதவிக்கான ஆட்சேர்ப்பு

*மத்திய மாகாண அரச சேவையின் நுவரெலியா பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ் காணும் பதவிகளுக்கான ஆர்சேர்ப்புக்காக இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட தகைமைகள் உள்ள நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நிரந்தர வதிவாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி தயாரித்த விண்ணப்பப்படிவத்தை 2018.10.05 ஆந் திகதிக்கு முன் செயலாளர், நுவரெலியா பிரதேச சபை, கந்தப்பளை என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவம் இடும் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிப் பதாயின் வெவ்வேறாக விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்க வேண்டும்.*

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | இணைக்கப் படும் இடம் | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | சாரதி III தரம் | 02 | நுவரெலியா பிரதேச சபை | PL 3 - 2016<br>ரூபா. 25,790 - 10X270- 10X300 - 10X330 - 12X350 - ரூபா 38,990 | ***கல்வித் தகைமைகள்***<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்பட ாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் மற்றும் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.<br><br>***தொழில் தகைமைகள்***<br>தார்பாரம் 34 அந்தருக்கு கூடிய பாரம் கொண்ட மோட்டார் வாகன பாரம் டேலர் மற்றும் 32 பயணிகளுக்கு குறையாத எண்ணிக்கையினர் செல்லக் கூடிய பேரூந்துக்கான சாரதி அனுமதிப் பத்திரம். அதாவது மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வெளியிடப்பட்ட 'ஏ' வாகன தரத்தின் சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்தின் படி ஏI, ஏ, பி I, பி, சிI, சி, சிடீ, டீI, டீ, ஜிI, ஜி, ஜே, தரத்தின் அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>***அனுபவம்***<br>மோட்டார் வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் கிடைத்த பின் குறைந்த பட்சம் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல்<br>(அனுபவம் முறையான சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.)<br><br>***உடல் ரீதியான தகைமைகள்***<br>குறைந்த பட்சம் 05 அடி 2 1/2" உயரம் இருத்தல்.<br>நன்றாக கண் பார்வை இருக்க |

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | இணைக்கப் படும் இடம் | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | வேண்டும். பகல் நேரத்தில் மற்றும் இரவு நேரத்தில் கடமையாற்றக் கூடிய உடல், உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். வீதி சட்ட நடைமுறை குறியீடு பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.<br><br>**ஆட்சேர்ப்பு முறை**<br>வகை சதவீதம்<br>திறந்த 70%<br>வரையறுத்த 30% |
| 02 | ஆயுர்வேத மருந்து கலவையாளர் III தரம் | 01 | ஆயுர்வேத மருந்துசாலை கந்தப்பளை | PL 2 - 2016<br>ரூபா. 25,250 - 10x270- 10x300-10x330- 12x350- ரூபா 38,450 | **கல்வித் தகைமைகள்**<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**தொழில்சார் திறன் மற்றும் நிபுணத்துவ திறன்**<br>தொழிலுக்குரிய தேசிய தொழிற் தகைமைகள் 02 ஆவது மட்டத்தில் (NVQ2) அல்லது 3 ஆவது மட்டத்தில் (NVQ3) சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தொழில் நுட்ப கல்வி பயிற்சித் திணைக்களத்தில் (DTET) தொழிலுக்கு குறிப்பிட்ட ஒரு வருடத்துக்கு குறையாத பாடநெறி கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தேசிய இளைஞர் சேவைச் சபையின் (NYSC) தொழிலுக்கான ஒரு வருடத்துக்கு குறையாத பாடநெறி கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் (VTA) தொழிலுக்கு குறிப்பிட்ட ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறி கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது தேசிய தொழில் பயிற்சி திணைக்களத்தின் (NAITA) குறிப்பிட்ட ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறி கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் பதிவுள்ள தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் தொழிலுக்குரிய ஒரு வருடத்துக்குக் குறையாத பாடநெறி கற்றதற்கான சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | இணைக்கப் படும் இடம் | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | | | | ***அனுபவம்***<br>குறிப்பிட்ட வேலை தொடர்பாக (பயிற்சிக் கால எல்லை குறைந்த பட்சம் 02 வருடமாக இருத்தல்.) |
| 03 | வீதிச் சேவையாளர் தரம் III | 10 | நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசம் | PL 1- 2016<br>ரூபா 24,250 - 10X250-10X270-10X300-12X330- ரூபா 36,410 | ***கல்வித் தகைமைகள்***<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் வேண்டும் மற்றும் 05 பாடம் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br>தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப்ப தாரிகள் இல்லாத பட்சத்தில் 5 ஆம் தரம் வரை சித்தியடைந்தவர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | சுகாதார ஊழியர் தரம் III | 12 | நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசம் | PL 1- 2016<br>ரூபா 24,250 - 10X250-10X270-10X300-12X330- ரூபா 36,410 | ***கல்வித் தகைமைகள்***<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்தி களுடன் 06 பாடங்கள் சித்தி யடைந்திருத்தல் வேண்டும் மற்றும் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.<br>தகைமைகள் பூர்த்தி செய்த விண்ணப் பதாரிகள் இல்லாத பட்சத்தில் 5 ஆம் தரம் வரை சித்தியடைந்தவர்களை சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| 05 | அலுவலக சேவையாளர் தரம் III | 02 | நுவரெலியா பிரதேச சபை பிரதான அலுவலகம் உப அலுவலகம் | PL 1- 2016<br>ரூபா 24,250 - 10X250-10X270-10X300-12X330- ரூபா 36,410 | ***கல்வித் தகைமைகள்***<br>கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | இணைக்கப் படும் இடம் | சம்பளத் திட்டம் | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 06 | காவலாளர் தரம் III | 01 | நானுஓயா | PL 1- 2016 ரூபா 24,250 - 10X250- 10X270-10X300- 12X330- ரூபா 36,410 | **கல்வித் தகைமைகள்** கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் 06 பாடங்கள் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். |
| 07 | நீர் சேவையாளர் தரம் III | 06 | கந்தப்பளை கல்பாலம நானுஓயா | PL 1- 2016 ரூபா 24,250 - 10X250- 10X270-10X300- 12X330- ரூபா36,410 | **கல்வித் தகைமைகள்** கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வு களுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்தி களுடன் 06 பாடங்கள் சித்தி அடைந் திருத்தல் வேண்டும். இதில் 05 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும். |

**குறிப்பு**. - வர்த்தமானியில் குறிப்பிட்ட பதவிகளுக்கான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரிகள் போதியளவு இவ் அதிகார பிரதேசத்திலிருந்து முன்வராவிடில், அயலிலுள்ள அதிகார பிரதேச விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

**02. ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரிகள் பரம்பரையில் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
02. விண்ணப்பதாரிகள் உடல், உள ரீதியாக ஆரோக்கியமாக இருத்தல் வேண்டும்.
03. விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் குறைந்த பட்சம் 03 வருட காலம் நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.
04. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் அல்லது வேறு ஒரு மாகாண அரச சேவையில் நிரந்தர சேவையில் இருப்பவர்களுக்கு கூடிய வயதெல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.)
05. மேற்படி குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பதவிகளுக்கும் உரியவாறு குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
06. ஆட்சேர்ப்பு விதி முறையின் படி முறையான நேர்முகப் பரீட்சைக்கு பங்கு பற்றி அதில் பெற்றுக்கொள்ளும் கூடிய புள்ளிகளின் அடிப்படையில் தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
07. சாரதிப் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் பங்கு பற்ற வேண்டும். தேவையான சகல தகைமைகளும் பூர்த்தி செய்த மற்றும் கூடிய புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகளின் தொழில் பரீட்சையின் பெறு பேறுகள் தகைமைகள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பின் போது உடல், உள ரீதியான ஆரோக்கியம் மற்றும் தொழில் மற்றும் பொது வசதிகள் பரிசோதனைக்கான நேர்முகப் பரீட்சையுடன் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை (தொழில் நுட்ப, பகுதி தொழில் நுட்பம் அற்ற பதவிக்கான) ஊடாக பெறப்படும் பெறுபேறுகளின் அடிப்படையில் தகைமையுள்ளவர்கள் மோட்டார் வாகன பரிசோதகரினால் நடாத்தப்படும் செயன்முறைப் பரீட்சையில் தகைமைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

08. விண்ணப்பங்கள் கோரிய பின் அல்லது விண்ணப்பம் கோரப்படும் இடைக்காலத்தில் ஆட்சேர்ப்பு தாமதமாகுதல் அல்லது மாற்றுதல் அல்லது இவ் அறிவித்தலை திருத்துதல் அல்லது இரத்து செய்தலின் அதிகாரம் நுவரெலியா பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

09. தற்போது நுவரெலியா பிரதேச சபையின் இப் பதவிகளின் அமைய, பதில், கொடுப்பனவு, ஒப்பந்த மற்றும் கூலி அடிப்படையில் சேவையில் ஈடுபட்டுள்ளோருக்கு கூடிய சலுகைகள் வழங்கப்படுவதுடன் அவர்கள் நிறுவன அதிகாரி ஊடாக தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

10. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் நுவரெலியா பிரதேச சபையில் தற்போது விதிக்கப்பட்டிருக்கும், விதிக்கப்படும் சட்ட ஒழுங்கு விதிகளுக்கும் அச் சட்டதிட்டங்கள் அனைத்துக்கும் கட்டுப்பட வேண்டும்.

11. முதன்மை தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்படும்.

**03.சேவையில் ஈடுபடுத்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

01. இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம்உட்பட (தங்களுக்கு உரிய ஓய்வூதியத் திட்டம் சம்பந்தமாக அரசாங்கத்தினால் எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்படிய வேண்டும்.)
02. விதவை மற்றும் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. ஆட்சேர்ப்பு செய்த பின் 03 வருட காலம் தகுதிகாண் காலமாகும். அக் காலத்துக்குள் வேலை, வருகை மற்றும் ஒழுக்கம் சீராக இருப்பின் தகுதிகாண் காலம் முடிவில் நிரந்தரமாக்கப்படும்.
04. அரச கரும மொழிக் கொள்கையின் படி தேவையான மொழித் திறன் பெற்றிருத்தல் வேண்டும்.
05. ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமான தாபன விதிமுறையின் II ஆம் அத்தியாயத்தின் ஆட்சேர்ப்புக்காக ஏனைய பொது நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
06. நல் ஒழுக்கத்துடன் இருத்தல் வேண்டும். எந்தவொரு அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது எந்தவொரு பிரதேசத்திற்குள்ளவராயினும் கடமையாற்ற தேக ஆரோக்கியத்துடன் இருப்பவராக இருத்தல் வேண்டும்.
07. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதி மன்றத்தில் குற்றவாளியாக தண்டனை பெற்றிராதவராக இருத்தல் வேண்டும்.
08. அரச அல்லது மாகாண அரச சேவையில் இருந்து நீக்கப்படாதவராக இருத்தல் வேண்டும். பொது நிர்வாக சுற்றறிக்கை 44/90 இன் கீழ் ஓய்வு பெறாதவராக இருத்தல் வேண்டும். நுவரெலியா பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் இட மாற்றங்களுக்கு கட்டுப்பட வேண்டும்.
09. சேவையில் திறன் அற்ற அல்லது திருப்தி அற்ற நிலை காணப்பட்டால் சபையின் விருப்பத்துடன் சேவையை நிருத்திவிடும் அதிகாரம் பிரதேச சபைக்குரியதாகும்.

**04. விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறை :**

இவ் அறிவித்தலின் இறுதியில் குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி A4 அளவிலான கடதாசியில் இரண்டு பக்கத்தையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கோரப்படும் பதவியை குறிப்பிட்டு 2018.10.05 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், நுவரெலியா பிரதேச சபை, கந்தப்பளை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பப்பட வேண்டும். தபாலில் தொலைந்து போகும் அல்லது சேதமாகும் அல்லது பிழையாக முகவரியை எழுதுவதன் மூலம் திருப்பி அனுப்பும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பாக பொறுப்பேற்கப்பட மாட்டாது. குறித்த தினத்துக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்துடன் கீழ்க் குறிப்பிட்ட ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை இணைக்கப்பட வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ் ;
2. தேசிய ஆளடையாள அட்டை ;
3. கல்விச் சான்றிதழ்கள் ;
4. கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழ் (பிரதேச செயலாளரின் கையொப்பத்துடன்) ;
5. தொழிற் தகைமைகளைக் குறிப்பிட்ட சான்றிதழ்கள் ;
6. சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;
7. அண்மையில் பெறப்பட்ட நல்லொழுக்க சான்றிழ்கள் 02 ;

எச். எம். ஜி. அஜித் புஷ்பகுமார,
செயலாளர்,
நுவரெலியா பிரதேச சபை

பிரதேச சபை அலுவலகம்,
நுவரெலியா,
2018, செத்தெம்பர் 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நுவரெலியா பிரதேச சபை**

நுவரெலியா பிரதேச சபையின் ........................................................ பதவி

1. முழுப் பெயர் : ..........................................................................................................

2. முகவரி : ..........................................................................................................

3. தொலைபேசி இல. : ..........................................................................................................

4. பிறந்த திகதி : ..........................................................................................................

5. தேசிய ஆளடையாள அட்டை இல. : .................................................... (பிரதிகளை இணைக்கவும்)

6. 2018.10.05 ஆந் திகதிக்கு வயது : ..........................................

7. இனம் : ..........................................................................................

8. விவாகமானவர் /விவாகமாகாதவர் : ..........................................................................................

9. தற்போது ஏதேனும் பதவி வகிப்பவராயின்

   I. தற்போது வகிக்கும் பதவியின் பெயர் : ..........................................................................................

   II. பதவியேற்ற திகதி : ......................................

   III. தொழிலின் தன்மை (நிரந்தரம் /அமைய /தற்காலிகம்) : ..........................................................

   IV. தேர்தல் பிரிவு : ..........................................................................................

   V. அனுபவம் மற்றும் சேவையாற்றிய காலம் : ..........................................................................................

10. கல்வித்தகைமை :

(இறுதியாக சித்தியடைந்த தரம் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இதனுடன் இணைக்கவும்)
க. பொ. த (சா. த.) பரீட்சையில் தோற்றிய வருடம் : ................. சுட்டெண் : .....................

| இல. | பாடம் | தரம் | இல. | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

11. தொழில்சார் தகைமைகள்: ........................................................................

12. ஏனைய தகைமைகள் : ........................................................................

(தொழில்நுட்ப அறிவு தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைக்கவும்)

13. நீங்கள் ஏதேனும் தவறுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? .............................

14. தற்போது நீங்கள் இப்பிரதேச சபையில் சேவையாற்றுகின்றீர்களா? ஆம் /இல்லை,
ஆம் எனில் தற்போது வகிக்கும் பதவி மற்றும் பதவியேற்ற திகதி : ....................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இல. 01-14 வரையான தகவல்கள் உண்மையென சான்றுறுதியளிப்பதுடன் இங்கு, குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பிழையென தெரியவரும் பட்சத்தில் நான் சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக கருதப்படுவதோடு, விண்ணப்பப்படிவத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு நான் கீழ்ப்படிவேன் என உறுதி கூறுகிறேன்.

................................. ......................................................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

தற்போது அரசாங்க பதவியில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு திணைக்கள அதிகாரியின் உறுதிப்படுத்தல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் ....................................ஆன .....................................இந்த திணைக்களத்தில் .................................... திகதி தொடக்கம் சேவையாற்றுகிறார். கேட்கப்பட்டுள்ள பதவிக்கு தெரிவுசெய்யப்படுவாராயின் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படுவார் /விடுவிக்கப்படமாட்டார். அத்தோடு எந்தவொரு குற்றச் செயல்களிலும் தொடர்பற்றவர் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

......................................................
திணைக்கள அதிகாரியின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை.

பெயர் : ......................................................

பதவி : ......................................................

திணைக்களம் : ......................................................

திகதி : ............................

9 - 488

## யட்டிநுவர பிரதேச சபை

### மத்திய மாகாண அரச சேவையின் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

யட்டிநுவர பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கெனப் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள யட்டிநுவர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

| | | |
|---|---|---|
| சேவை வகுதி | : | ஆரம்பத்தரம் தேர்ச்சியுள்ள |
| பதவிப் பெயர் | : | வாகன ஓட்டுநர் |
| சம்பளக் குறியீடு | : | PL - 03 - 2016 |
| சம்பள அளவுத் திட்டம் | : | ரூபா. 25,790 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 - ரூபா. 38,990 |
| வெற்றிடங்களின் எண்ணிக்கை | : | 02 |

**ஆட்சேர்ப்பு முறை :**

ஆட்சேர்ப்பு விகிதம்

| துறை | வீதம் |
|---|---|
| திறந்த | 70% |
| வரையறுத்த | 30% |

**திறந்த ஆட்சேர்ப்பு :**

ஆட்சேர்ப்பு தரம் : தரம் III

**தகைமைகள் :**

**கல்வித் தகைமைகள்**

இரு அமர்வுகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**

ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட 'ஏ' அல்லது 'பீ' தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். அதற்கு மேலதிகமாக இயந்திர இயக்குநர் பதவிக்கென அரசாங்கம் அங்கீகரித்த அமையமொன்றில் இருந்து பெறப்பட்ட தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ - 4) பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அனுபவம் :**

சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்.).

**உடற் தகைமைகள்**

i. பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும் ;

ii. குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.

**ஏனைய தகைமைகள் :**

1. விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
2. குறித்த உள்ளூராட்சி அமையத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குள் விண்ணப்பதாரி 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் ;
3. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும் ;
4. ஆட்சேர்ப்புக்கான அனைத்து தகைமைகளையும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பெற்றிருத்தல் வேண்டும் ;

**வயது :**

ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆகவும் உச்ச வயதெல்லை 45 ஆகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின்படி அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளிடமிருந்து தொழிற் சோதனையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தேவையான அனைத்துத் தகைமைகளையும் கொண்டுள்ள விண்ணப்பதாரி களிடையே அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரது தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**எழுத்துப் பரீட்சை**

| வினாப்பத்திரம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | மொத்தப் புள்ளிகள் பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 40% |
| 02. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | 01 மணி நேரம் | 100 | 20% |

போட்டிப் பரீட்சைக்குத் தாம் கல்விகற்ற மொழிமூலத்தில் அல்லது அரச கரும மொழியொன்றில் இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையெழுதுதல் வேண்டும்.

சித்தி பெறுவதற்கென ஒவ்வொரு பாடத்துக்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) பெற்றிருத்தல் வேண்டும்.

| *வினாப்பத்திரம்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 03. வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | வீதிப் போக்குவரத்துச் சட்டம் மற்றும் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரம் |
| 04. மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு | மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவு தொடர்பான பல்தேர்வு வினாப்பத்திரம் |

**தொழில்சார் தேர்வு**

| *பரிசோதித்து புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *அதிகூடிய புள்ளி* | *சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு* |
|---|---|---|
| 1. வாகனம் ஓட்டும் தேர்ச்சி/இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி | 40 | எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக்குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழிற்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். |
| 2. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு | 40 | |
| 3. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**வரையறுத்த ஆட்சேர்ப்பு**

ஏற்கனவே உரிய உள்ளூராட்சி அமையத்தில் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள பணியாட்களுக்குப் பொருந்தும்.

ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

**தகைமைகள்**

**கல்வித் தகைமைகள்**

இரு அமர்வுகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**

ஆட்சேர்ப்புத் தினத்துக்குக் குறைந்தது 03 வருடங்களுக்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட ஏ அல்லது பீ தரத்துக்கான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல். அதற்கு மேலதிகமாக இயந்திர இயக்குநர் பதவிக்கென அரசாங்கம் அங்கீகரித்த அமையமொன்றில் இருந்து பெறப்பட்ட தேசிய தொழிற் தகைமை மட்டம் 4 (NVQ - 4) பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அனுபவம் :**

*சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னர் சாரதி ஒருவராகக் குறைந்தது 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் (சான்றிதழ்கள் மூலம் அதனை நிரூபித்தல் வேண்டும்.).*

**உடற் தகைமைகள்**

i. *பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும் ;*

ii. *குறைந்தது 05 அடி 2 1/2 அங்குல உயரம் கொண்டிருத்தல் வேண்டும்.*

**ஏனைய தகைமைகள் :**

1. *விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;*
2. *குறித்த உள்ளூராட்சி அமையத்தின் அதிகாரப் பிரதேசத்துக்குள் விண்ணப்பதாரி 03 வருடங்களுக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டிருத்தல் வேண்டும் ;*
3. *வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும் ;*
4. *ஆட்சேர்ப்புக்கான அனைத்து தகைமைகளையும் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று எல்லா வகையிலும் பெற்றிருத்தல் வேண்டும்.*

**வயது :**

*ஆகக் குறைந்த வயதெல்லை 18 ஆகவும் உச்ச வயதெல்லை 45 ஆகவும் இருத்தல் வேண்டும்.*

**ஆட்சேர்ப்பு முறை :**

*உடல், உளப் பொருத்தப்பாடுகள் மற்றும் கல்வி, தொழில் தகைமை மற்றும் பொதுவான தகைமைகளைப் பரிசோதிப்பதற்கான நேர்முகத் தேர்வுடன் கட்டமைப்பான நேர்முகத் தேர்வின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதியைப் பெறுவோர் மோட்டார் வாகனப் பரிசோதகரால் நடத்தப்படும் செயன்முறைத் தேர்வில் தகுதி பெறுதல் வேண்டும்.*

**கட்டமைப்புத் தேர்வு**

| *பரிசோதித்து புள்ளி வழங்கப்படும் தலைப்பு* | *அதிகூடிய புள்ளி* | *சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளி அளவு* |
|---|---|---|
| *1. வாகனம் ஓட்டும் தேர்ச்சி/இயந்திரத்தை இயக்கும் தேர்ச்சி* | *40* | *எழுத்துப் பரீட்சையில் மொத்தப் புள்ளியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டுமே செயன்முறைத் தேர்வுக் குழுவினர் நடத்தும் வாகனம் ஓட்டும் தேர்ச்சியை அளவிடுவதற்கான தொழிற்சார் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும். தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசோதிக்கப்பட்டோரிடையே தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.* |
| *2. வீதிப் போக்குவரத்துச் சட்டம் பற்றிய செயன்முறை அறிவு* | *40* | |
| *3. மோட்டார் பொறிமுறை பற்றிய அடிப்படை அறிவு* | *20* | |
| **மொத்தப் புள்ளிகள்** | ***100*** | |

கீழே குறிப்பிடப்பட்டுள்ள **"பொதுவான அம்சங்கள்"** இந்தப் பதவிகளுக்குப் பொருந்தும்.

சேவை வகுதி : ஆரம்பத் தரம் தேர்ச்சியற்ற
சம்பளக் குறியீடு : PL 01 - 2016
சம்பள அளவுத் திட்டம் : ரூபா 24, 250 - 10X250 - 10X270 - 10X300 - 12X330 - ரூபா 36, 410

| தொ. இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | நூலக உதவியாளர் | 01 |
| 02 | நீர்த் தொழிலாளர் | 01 |
| 03 | தகனசாலை உதவியாளர் | 01 |
| 04 | வேலை/வெளிக்களத் தொழிலாளர் | 02 |
| 05 | சுகாதாரத் தொழிலாளர் | 02 |

**ஆட்சேர்ப்பு விகிதம்**

| துறை | விகிதம் |
|---|---|
| திறந்த | 100% |
| வரையறுத்த | பொருந்தாது |
| தேர்ச்சி | பொருந்தாது |

ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

**தகைமைகள்**

**கல்வித் தகைமைகள்**

இரு அமர்வுகளுக்கு மேற்படாத கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தது 02 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் 05 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

வேலை/வெளிக்களத் தொழிலாளர் பதவி மற்றும் சுகாதாரத் தொழிலாளர் பதவிகளுக்கு மட்டும் மேற்குறித்த தகைமைகளைக் கொண்டுள்ளோர் இல்லாத பட்சத்தில் தரம் 5 சித்தி ஆகக் குறைந்த தகைமையாகக் கொள்ளப்படும்.

**உடற் தகைமை**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பகல் மற்றும் இராக் காலங்களில் சேவையாற்றக்கூடிய உடல் மற்றும் உளத் தகுதியைக் கொண்டிருப்பதுடன் சிறந்த கண் பார்வையையும் பெற்றிருத்தல் வேண்டும். சிறந்த நன்னடத்தை உடையவராகவும், தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையில் ஈடுபடுவதற்குரிய பொருத்தமான உடல் நிலை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை**

தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் கட்டமைப்பான நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளது தொடரொழுங்கின்படி நிலவும் பதவி வெற்றிடங்களில் நிரப்பப்படுவர். எழுத்துப் பரீட்சை அல்லது தொழிற் தேர்ச்சித் தேர்வு என்பன பொருந்தாது.

**கட்டமைப்பான நேர்முகத் தேர்வு**

| புள்ளி வழங்கப்படும் முக்கிய தலைப்பு | அதிகூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கெனத் தேவையான புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிகக் கல்வித் தகைமைகள் | 40 | பொருத்தமற்றது. அதிகூடிய புள்ளிகளைப் பெறுவோரிடையே வெற்றிடங்களுக்கமையத் தெரிவு மேற்கொள்ளப்படும். |
| அனுபவம் | 55 | |
| நேர்முகத் தேர்வில் காட்டும் தேர்ச்சிகள் | 05 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

## பொதுவான அம்சங்கள்

**தேவையான ஏனைய தகைமைகள் :**

1. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;
2. விண்ணப்பதாரிகள் வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
3. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவின் நிருவாக எல்லைக்குள் தொடர்ச்சியாக 03 வருடகாலத்துக்குக் குறையாத நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் இடாப்பு அல்லது பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் மூலம் வதிவிடம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.);
4. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல தேகாரோக்கியத்தைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும் ;
5. குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது ;
6. சபையில் தற்போது நிரந்தர, தற்காலிக, சமயோசித, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் ;
7. விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

i. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை ;

ii. நியமனம் 3 வருட தகுதிகாண் சேவைக் காலத்துக்கு உட்படும் ;

iii. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாகத் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக்கும் அமையச் செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.**

1. பிறப்பு சான்றிதழ் ;
2. கல்விச் சான்றிதழ்கள் ;
3. அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணச் சான்றிதழ்கள் ;
4. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
5. தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் ;
6. அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

**விண்ணப்பங்களை முன்வைத்தல்**

இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2018, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "**செயலாளர், யட்டிநுவர பிரதேச சபை, எம்பில்மீகம, பிலிமத்தலாவ**" என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், அல்லது இரத்துச் செய்யும் அனைத்து அதிகாரமும் யட்டிநுவர பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

இந்த அறிவித்தலில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் பொருள் மயக்கம் ஏற்படுமெனின் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

டபிள்யூ. ஏ. எல். ரீ. ஜயரத்ன,
செயலாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
2018, செத்தெம்பர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**யட்டிநுவர பிரதேச சபை**

.................................................................. **பதவிக்கான விண்ணப்பப் படிவம்.**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ........................................................................

2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ........................................................................

3. நிரந்தர முகவரி : ........................................................................................................

4. ஆண்/பெண் : ..........................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு : .......................... மாதம் : ..............................திகதி : ....................................

6. வம்சாவழியினாலா? பதிவினாலா? இலங்கைப் பிரசை : ........................................................................

7. கல்வித் தகைமைகள்

i. க. பொ. த. (சா. த.) பரீட்சை :

சித்தியடைந்த வருடம் : ........................... சுட்டெண் : ...........................................

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

ii. ஏனைய கல்வித் தகைமைகள் : ............................................................ .............................
........................................................................................................................

8. தொழிற் தகைமைகள் : ............................................................ ..........................................
........................................................................................................................

9. சேவை அனுபவம் : ............................................................ ............................................
........................................................................................................................

i. தற்போது பணியாற்றும் அமையம் : ..........................................................................

ii. தற்போது வகிக்கும் பதவி : ......................................................................................

iii. அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : .........................................................................

iv. முன்னர் பணியாற்றிய இடத்தில் வகித்த பதவி : ......................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் நட்டஈடு எதுவுமின்றி பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : .................................

09 - 722

## வரவு செலவுத் திரட்டுக்கள்

**அட்டவணை I**

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

***2017.12.31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று***

| | | 2017.12.31 | 2016.12.31 |
|---|---|---|---|
| **நடைமுறைச் செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்** | | | |
| *சாதாரண செயற்பாடுகளில் இருந்து கிடைக்கப் பெற்ற மீதி/பற்றாக்குறை* | | *25,420,109.63* | *56,603,856.44* |
| **காசு இல்லாத நிகழ்வுகளுக்கான சீராக்கல்கள் (ஜேர்னல் 56)** | *28,571.40* | | |
| *நிலுவை* | | - | - |
| *பணிக் கொடைக்கு ஒதுக்கல்* | | - | - |
| *முன்னைய வருடத்துக்கான சீராக்கல்கள்* | | *(42,758,188.59)* | *26,013,866.47* |
| **மூலதன மாற்றங்களுக்கு முன் நடைமுறை மிகை/பற்றாக்குறை** | | ***(17,309,507.56)*** | ***82,617,722.91*** |
| *மொத்தக் கடன் ஏனைய பெறுகைகள் அதிகரித்தல்/குறைதல்* | | *1,895,190.61* | *(88,454,227.29)* |
| *கடன் கொடுநர்கள்/செலுத்த வேண்டியவை அதிகரித்தல் (குறைதல்)* | | *33,826,072.61* | *33,382,728.69* |
| **01. செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்** | | ***18,411,755.66*** | ***27,546,224.31*** |
| *முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்* | | | |
| *சொத்துக்களை (எடுத்துக் கொள்ளல்/நீக்குதல்)* | | *(3,594,625.73)* | *(18,522,455.80)* |
| *(மூலதனச் செலவு)* | | *(157,098,797.63)* | *(67,329,726.79)* |
| **02. முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்** | | ***(160,693,423.36)*** | ***(85,852,182.59)*** |
| *நிதிச் செயற்பாடுகளிலிருந்தான நிதிப் பாய்ச்சல்* | | | |
| *மூலதனம் கிடைத்தல்* | | *136,801,373.78* | *66,459,574.39* |
| *கடன் மீளச் செலுத்தல்/பெறல்* | | *(2,138,044.53)* | *(1,955,922.59)* |
| **03. நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய நிதிப் பாய்ச்சல்** | | ***134,663,329.25*** | ***64,503,651.80*** |
| *வருடத்தினுள் தேறிய நகர்வுகள் (1 + 2 + 3)* | | *(7,618,338.45)* | *6,197,693.52* |
| *வருட ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு ஒப்பானவை* | | *12,544,413.16* | *6,346,719.64* |
| **வருட இறுதியில் காசு மற்றும் காசுக்கு ஒப்பானவை (குறிப்பு A)** | | ***4,926,074.71*** | ***12,544,413.16*** |

**குறிப்பு A**

| | | |
|---|---|---|
| *மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 163* | *4,349,532.01* | *12,052,953.77* |
| *மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கு - 445* | *576,542.70* | *491,459.39* |
| | ***4,926,074.71*** | ***12,544,413.16*** |

*ஆர். பீ. டி. சுனில் ஜயவீர,*
*தலைவர்,*
*பண்டுவஸ்நுவர பிரதேச சபை.*

**அட்டவணை II**

**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**

***2017.12.31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று***

| | | |
|---|---|---|
| **சொத்துக்கள்** | ***2017.12.31*** | ***2016.12.31*** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| சொத்து இயந்திரச் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 209,065,388.87 | 205,470,763.14 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| தொகை | 4,773,519.71 | 4,666,088.00 |
| தொழிலாளர் கடன் மற்றும் முற்கொடுப்பனவுகள் | 11,089,944.41 | 9,705,226.77 |
| கிடைக்கப்பெற வேண்டியவை | 147,141,486.69 | 146,177,971.25 |
| முதலீடுகள் | 11,834,801.71 | 16,185,657.11 |
| காசு மற்றும் காசுக்கு நிகரானவை | 4,926,074.71 | 12,544,413.16 |
| | 179,765,827.23 | 189,279,356.29 |
| **மொத்த சொத்துக்கள்** | **388,831,216.10** | **394,750,119.43** |
| **பொறுப்புக்கள்** | | |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 13,694,444.04 | 15,832,488.57 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 128,560,751.55 | 94,734,678.94 |
| உரிமைகள் | 246,576,020.51 | 284,182,951.92 |
| **மொத்த உரிமைகளும் பொறுப்புக்களும்** | **388,831,216.10** | **394,750,119.43** |

ஆர். பீ. டி. சுனில் ஜயவீர,
தலைவர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

## அட்டவணை III

### பண்டுவஸ்நுவர பிரதேச சபை

### *2017, திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள்*

| | பொது நிர்வாகம் | சுகாதார சேவைகள் | பௌதீகத் திட்டமிடல் | நீர் சேவைகள் | பொது பயன் சேவைகள் | நலன்புரி மற்றும் பொது வசதிகள் | 2017.12.31 | 2016.12.31 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **குறிப்பு 01 - அரச பங்களிப்பு மீண்டெழக் கூடியது** | | | | | | | | |
| 70 - மாகாண சபை/உள்ளூராட்சி அமைச்சு | 14,346,446.00 | 7,193,032.96 | 13,191,413.00 | 1,345,916.50 | 1,249,906.00 | 13,536,879.01 | 50,863,593.47 | 58,073,618.42 |
| மொத்தம் | 14,346,446.00 | 7,193,032.96 | 13,191,413.00 | 1,345,916.50 | 1,249,906.00 | 13,536,879.01 | 50,863,593.47 | 58,073,618.42 |
| **குறிப்பு 02 - ஏனைய வருவாய்கள்** | | | | | | | | |
| 10. மதிப்பீட்டு வரி மற்றும் ஏனைய வரிகள் | 1,788,721.52 | 1,507,450.00 | - | - | - | 480,403.20 | 3,776,574.72 | 3,764,210.72 |
| 20. கூலி வருமானம் | - | - | 11,824,461.63 | - | 12,414,687.60 | 200,000.00 | 24,439,149.23 | 29,312,919.42 |
| 30. அனுமதிப் பத்திரக் கட்டணம் | 279.00 | 1,303,002.00 | - | - | - | 3,000.00 | 1,306,281.00 | 1,195,658.91 |
| 40. சேவைகள் கட்டணம் | 114,000.00 | 1,385,019.00 | 24,051,502.67 | 2,134,895.48 | - | 271,419.30 | 27,956,836.45 | 54,291,615.92 |
| 50. தண்டப் பணம் மற்றும் பிடியாணைக் கட்டணம் | 2,771,410.29 | - | 292,781.26 | - | 93,322.51 | 60,911.25 | 3,218,425.31 | 7,358,561.21 |
| 60. ஏனைய வருமானங்கள் | 2,044,585.61 | 309,875.00 | 1,419,039.85 | 5,101,598.54 | 823,237.12 | 20,820.20 | 9,719,156.32 | 5,376,432.52 |
| மொத்தம் | 6,718,996.42 | 4,505,346.00 | 37,587,785.41 | 7,236,494.02 | 13,331,247.23 | 1,036,553.95 | 70,416,423.03 | 101,299,398.70 |
| **குறிப்பு 03 - மீண்டெழும் செலவுகள்** | | | | | | | | |
| 01. சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 12,233,850.60 | 12,399,329.63 | 12,173,414.58 | 969,526.60 | 1,203,963.23 | 17,354,678.94 | 56,334,763.58 | 56,325,634.75 |
| 02. பிரயாணச் செலவுகள் | 242,785.00 | - | 54,884.60 | - | - | 12,658.00 | 310,327.60 | 379,466.20 |
| 03. வழங்கல் மற்றும் உபகரணங்கள் | 2,462,994.23 | 3,251,929.02 | 2,553,100.89 | 1,580,861.22 | 268,317.75 | 362,902.26 | 10,480,105.37 | 7,192,868.27 |
| 04. மூலதனச் சொத்துக்கள், திருத்தம் மற்றும் பராமரிப்பு | 670,903.97 | 1,333,775.00 | 8,647,237.53 | 559,777.75 | 840,834.96 | 1,167,551.81 | 13,220,081.02 | 24,805,116.84 |
| 05. போக்குவரத்து தொடர்பாடல், தேவைப்பாடுகள் மற்றும் சேவைகள் | 1,496,729.61 | 1,240,188.47 | 686,654.07 | 4,495,761.37 | 739,407.55 | 322,492.15 | 8,981,233.22 | 7,436,676.32 |
| 06. வட்டிக் கொடுப்பனவு, இலாபப் பகிர்வு மற்றும் மானியங்கள் | - | - | 524,932.21 | - | 828,514.42 | - | 1,353,446.63 | 1,547,164.57 |
| 07. நன்கொடைகள், பங்களிப்புப் பணம் மற்றும் மானியங்கள் | 507,219.81 | 174,457.50 | - | - | 2,760.00 | 4,210,877.81 | 4,895,315.12 | 4,848,121.70 |
| 08. ஓய்வூதியம், ஓய்வூதிய நன்மைகளும் பணிக்கொடைகளும் | 93,474.78 | 191,159.55 | - | - | - | - | 284,634.33 | 234,112.03 |
| மொத்தம் | 17,707,958.00 | 18,590,839.17 | 24,640,223.88 | 7,605,926.94 | 3,883,797.91 | 23,431,160.97 | 95,859,906.87 | 102,769,160.68 |
| **குறிப்பு 04 - மூலதன வருமானம் - 80** | 227,355.77 | 3,598,108.51 | 120,388,471.83 | 12,142,930.47 | - | 444,507.20 | 136,801,373.78 | 66,459,574.39 |
| மொத்தம் | 227,355.77 | 3,598,108.51 | 120,388,471.83 | 12,142,930.47 | - | 444,507.20 | 136,801,373.78 | 66,459,574.39 |
| **குறிப்பு 05 - மூலதன வருமானம் - 09** | 2,193,292.13 | 10,262,491.62 | 129,882,509.27 | 13,225,267.55 | 500,000.00 | 4,629,862.79 | 160,693,423.36 | 85,852,182.59 |
| மொத்தம் | 2,193,292.13 | 10,262,491.62 | 129,882,509.27 | 13,225,267.55 | 500,000.00 | 4,629,862.79 | 160,693,423.36 | 85,852,182.59 |

ஆர். பீ. டி. சுனில் ஜயவீர,
தலைவர்,
பண்டுவஸ்நுவர பிரதேச சபை.

09 - 439